# பொதுக்காலம் 17ஆம் ஞாயிறு

# திருவழிப்பாட்டு ஆண்டு A (30-07-2017)

**திருப்பலி முன்னுரை**

அன்புமிக்க சகோதர சகோதரிகளே! தாம் அழைத்தோரைத் தமக்கு ஏற்புடையோராக்கி தம் மாட்சியில் பங்கு பெறச் செய்யும் நம் ஆண்டவரின் சந்நிதானத்தில் ஒன்று கூடியுள்ளோம். நம் இறைத் தந்தையின் திருநாமத்தில் நல்வாழ்த்துக்கள் கூறி உங்கள் அனைவரையும்: பொதுக்காலம் பதினேழாம் ஞாயிறு. திருப்பலிக் கொண்டாட்டத்திற்கு வரவேற்று நிற்கின்றோம்.

நாம் கேட்பது பொது நலனுக்காக அல்லது ஆண்டவருக்கு உகந்ததாய் இருக்கும்போது ஆண்டவரும் பேருவகையோடு நாம் கேட்பதற்கு மேலாகவே தருவார். ஆண்டவருடைய சொற்களைக் கடைப்பிடிக்கும் போது நாம் அடையும் நன்மைகள் ஆயிரக்கணக்கான பொன், வெள்ளிக் காசுகளைவிட மேலானது. தாம் அழைத்தோரைத் தமக்கு ஏற்புடையோராக்கி இருக்கிறார்: தமக்கு ஏற்புடையோரானோரைத் தம் மாட்சியில் பங்கு பெறச் செய்தார். என்னும் நல்ல செய்திகளை இன்றைய இறைவார்த்தைகள் நமக்குத் தருகின்றன. இவ்வேளையில் நாம் ஒவ்வொருவரும், இறைவனிடம் மட்டுமே இருக்கின்ற நம் வாழ்வுக்கு ஆதாரமான அனைத்து ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்ள, உலகத்தின் போக்குகளைத் தள்ளிவிட்டு இறைவனுடைய திருச்சட்டத்தின் மீது பற்றுக் கொண்டு வாழ இறையருள் கேட்டுச் செபிப்போம்.

**விசுவாசிகள் மன்றாட்டுகள்:**

ஆண்டவரே! நீரே எனக்குரிய பங்கு: உம் சொற்களைக் கடைப்பிடிப்பதாக நான் வாக்களித்துள்ளேன்.

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைத் தயவாய் கேட்டருளும்.

**நீர் அழைத்தோரைத் உமக்கு ஏற்புடையோராக்கி உம் மாட்சியில் பங்கு பெறச் செய்த தந்தையே இறைவா!**

நீர் அழைத்து அபிசேகம் செய்துள்ள எம் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், துறவிகள், அனைவரும் சாலமோனைப் போன்று ஞானத்தோடு பணியாற்றவும், உமது திருச்சட்டத்தின்மீது மிகுந்த பற்றுக் கொண்டு வாழவும் வேண்டிய சக்தியையும், ஆற்றலையும் அவர்களுக்கு அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**அன்பான தந்தையே!**

நாம் ஒவ்வொருவரும், உம்மிடம்; மட்டுமே இருக்கின்ற எம் வாழ்வுக்கு ஆதாரமான அனைத்து ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்ளத் தடையாக இரக்கின்ற, உலகத்தின் போக்குகளைத் தள்ளிவிட்டு உம்முடைய திருச்சட்டத்தின் மீது பற்றுக் கொண்டு வாழ அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**உமது வார்த்தையால் எம்மைக் குணப்படுத்தும் தந்தையே இறைவா!**

பல்வேறு நோய்களினாலும், கவலைகளினாலும் பாதிக்கப்பட்டு வேதனையோடு வாழ்ந்து கொண்டிருக்கும் அனைவர் மீதும் மனமிரங்கி, அவர்கள் உடல் நலமும், மனநலமும் பெற்று மகிழ்ந்திட அருள்கூர்ந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**உம்மை நோக்கி மன்றாடும் அனைவருக்கும் பேரன்பு காட்டும். ஆண்டவரே,**

எம் வேண்டுதலுக்குச் செவிகொடும்: நாங்கள் ஒவ்வொருவரும் நீதி, நேர்மை, கனிவு, பொறுமை, தாழ்ச்சியுடையோராய் உமது வார்த்தையின்படி எமது வாழ்வைக் கட்டியெழுப்புவதற்கு வேண்டிய அருளை அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**ஆற்றலும், ஆறுதலும் நிறைந்த வார்த்தையால் எங்களுக்கு வழிகாட்டும் தந்தையே!**

நாங்கள் ஒவ்வொருவரும் நல்ல நிலத்தில் விதைக்கப்பட்ட விதைகளுக்கு ஒப்பாகி இறைவார்த்தையைக் கேட்டுப் புரிந்து கொண்டுப நூறு மடங்காகவும், அறுபது மடங்காகவும் முப்பது மடங்காகவும் பயன் அளிக்கவும், இக்காலத்தில் நாம் படும் துன்பங்கள் எதிர்காலத்தில் நமக்காக வெளிப்படப் போகிற மாட்சியோடு ஒப்பிடத் தகுதியற்றவை என்னும் வார்த்தையை விசுவசித்து வாழவும் வரம்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**கருணையும் இரக்கமும் நிறைந்த தந்தையே!**

நோயினால் வாடுவோர், தனிமையில் இருப்போர், கவலையினாலும் துன்பங்களினாலும் கலங்குவோர், தேவையில் உழல்வோர், அடிமைத்தனத்துள் வாழ்வோர் அனைவரையும் உமது கருணையினாலும், இரக்கத்தினாலும் நிறைத்து அவர்கள் அனைவருக்கும் ஆறுதலையும், நிம்மதியையும் அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம். .